## சாதாரணக்கூட்டம்

2023–ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 31–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**பொருள் எண்.1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் அக்டோபர்–2023 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.277 நாள். 29.09.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

பள்ளிபாளையம் நகராட்சியில் அக்டோபர் மாதம் 26–ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண் | வரியின் விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 4.96 | 207.63 | 0.28 | 84.23 | 4.68 | 123.39 |
| 2. | காலியிட வரி | 2.61 | 3.87 | 2.61 | 1.97 | 0.00 | 1.89 |
| 3. | தொழில்வரி | 14.38 | 18.02 | 14.15 | 9.06 | 0.22 | 8.96 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 6.80 | 71.06 | 1.01 | 23.25 | 5.79 | 47.81 |
| 5 | வரியில்லா இனம் | 0 | 19.64 | 0 | 18.31 | 0 | 1.33 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.23 | 48.32 | 0.02 | 17.91 | 0.20 | 30.41 |
| | **மொத்தம்** | **28.98** | **368.54** | **18.07** | **154.73** | **10.89** | **213.79** |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.**1523/2013/**சி**1**

**தீர்மான எண்.278 நாள். 31.10.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**<u>பொருள் எண்.3</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**39631/2022/**SBM, நாள்.**20.01.2023** செயல்முறையின் படி, நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் **2.0 –2022–23** (Swachh Bharat Mission- 2022-23**) –**கீழ் ரூ.**1079.00** இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு கோட்டக்காடு பகுதியில் மண்பரிசோதனை செய்ய அரசு பொறியியல் கல்லூரி, தருமபுரி அவர்களுக்கு தொகை ரூ.**21,240/–** க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.**1442/2023/**இ**1**

**தீர்மான எண்.279 நாள். 31.10.2023**

அனுமதக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.4</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் **2022–23** ன் கீழ் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 04.10.2023 – ம் தேதி புதன்கிழமை அன்று கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>நமக்கு நாமே திட்டம் 2023–24</u><br>**<u>Namakku Namme Thittam 2023-24</u>**<br>**<u>மழைநீர் வடிகால் மற்றும் சிறபாலம்</u>**<br>1. 3வது வார்டு தில்லை நகர்<br>2. 5வது வார்டு முனியப்பன் கோவில்<br>3. 7வது வார்டு வாய்க்கால் ரோடு 8வது குறுக்கு தெரு<br>4. 9வது வார்டு திருச்செங்கோடு ரோடு to நகராட்சி ரோடு வரை<br>5. 10வது வார்டு<br>6.<br>7.<br>8. பெரும்பாறைக்காடு<br>9. நேருநகர் 1வது குறுக்குத்தெரு<br>10. 11வது வார்டு முனியப்பன் கோவில் 3வது தெரு<br>11. 11வது வார்டு முனியப்பன் கோவில் 2வது தெரு<br>12. 12வது வார்டு ஈ.ஆர்.தியேட்டர் ரோடு குறுக்கு வீதி | 30,00,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.08% குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி, பவானி. | 0.03 % கூடுதல் |
| 2 | **<u>மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம்</u>**<br>3வது வார்டு தில்லை நகர் | 3,00,000/- | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி, பவானி. | 0.09 % குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.05% கூடுதல் |
| 3 | **<u>மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம்</u>**<br>1. 5வது வார்டு முஸ்லீம் தெரு<br>2. 10வது வார்டு பெரும்பாறைக்காடு | 3,00,000/- | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், | 0.12 % குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.04% கூடுதல் |
| 4 | **<u>மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம்</u>**<br>1. 7வது வார்டு வாய்க்கால் ரோடு<br>2. 21வது வார்டு கண்ணனூர் மாரியம்மன் கோவில் பகுதி மற்றும் அம்மன் நகர் | 6,00,000/- | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி, பவானி. | 0.06 % குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.04% கூடுதல் |

கோப்பு எண்.1117/2023/இ1

**தீர்மான எண்.280 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.5</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு (15th CFC) **2023–24** ன் கீழ் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 06.10.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023–24 (15th CFC) 2023–24</u>** பள்ளிபாளையம் நகராட்சி உட்பட்ட வார்டு எண்.19 ல் மீனவர் தெரு பகுதியில் படித்துறை அமைத்தல் | 64,00,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.99% குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி, பவானி. | 1.00 % கூடுதல் |
| 2 | பள்ளிபாளையம் நகராட்சி உட்பட்ட வார்டு எண்.1 ல் அக்ரஹாரம் காவேரி நதி ஓரத்தில் தெரு பகுதியில் படித்துறை அமைத்தல் | 19,00,000/- | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், | 0.99 % குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 1.00 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1592/2023/இ1

**தீர்மான எண்.281 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.6</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.10.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி திட்டம் 2023–24</u>** பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 மற்றும் வார்டு எண்.19 ஆகிய பகுதியில் செல்லும் ஓடையினை தூர்வாரி ஓடையில் உள்ள செடி, கொடிகளை சுத்தம் செய்தல் மற்றும் வார்டு எண்.4 மற்றும் வார்டு எண்.19 ஆற்றங்கரையோர பகுதிகளை சுத்தம் செய்யும் பணி | 3,20,000/- | M/S ஈஸ்வரா ப்ளு மெட்டல்ஸ், க.எண். 4/19எ, குமாரபாளையம் மெயின் ரோடு, கலியனூர், பள்ளிபாளையம் | 0.10% குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.27 % கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.10% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/S ஈஸ்வரா ப்ளு மெட்டல்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1592/2023/எச்1

**தீர்மான எண்.282 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.7</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.10.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி திட்டம் 2023–24</u>** பள்ளிபாளையம் நகராட்சியில் புதன்சந்தை வளாகத்தில் பொதுக்கழிப்பிடத்திற்கு முகப்பு பணிகள் மற்றும் PVC தடுப்புகள் அமைக்கும் பணி | 2,70,000/- | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி, சிங்கம்பேட்டை, பவானி | 0.20% குறைவு |
| | | | கே.எஸ்.மாரியப்பன், 716பி, குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | 1.53 % கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.10% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.2095/2023/இ1

**தீர்மான எண்.283 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.8</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.10.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி திட்டம் 2023–24</u>** பள்ளிபாளையம் நகராட்சி சொந்தமான உரக்கிடங்கில் உள்ள பயோகேஸ் பவர் பிளாண்டில் பயன்படுத்தப்பட்டு வரும் காய்கறிகளை துண்டிக்கும் இயந்திரம் (Shredder Machine) புதியதாக கொள்முதல் செய்யும் பணி | 3,00,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன், 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.28% குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97A, ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி, பவானி. | 1.46 % கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.28% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1179/2023/இ1

**தீர்மான எண்.284 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.9</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள RO Plant பழுதாகி உள்ளது என மின்பணியாளர் தெரிவித்ததின் பேரில் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டதில் RO Plant பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்றதில் ரூ.8,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.439/2023/இ1

**தீர்மான எண்.285 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.10</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள RO Plant பழுது செய்யும் பணிக்காக 13.10.2023 தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஏஜென்சி,<br>ஆர் ஓ சிஸ்டம் மற்றும் யூபிஸ், பேட்டரிஸ்,<br>எப்3, விக்னேஸ்வரர் காம்லக்ஸ், மூலப்பட்டரை, ஈரோடு–3 | 8,000.00 |
| 2 | ஸ்ரீ அல்டிமா பவர் சிஸ்டம்,<br>விவிடிவி ரோடு, ஈரோடு | 9,100.00 |

| | | |
|---|---|---|
| 3 | கந்தன் சர்வீஸ் செண்டர்,<br>பவானி மெயின் ரோடு,<br>ஈரோடு. | 9,350.00 |

**அலுவலக குறிப்பு**

1). மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ ஏஜென்சி அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2). மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.439/2023/இ1

**தீர்மான எண்.286 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.11</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் இருந்து வெளியேறும் கழிவுநீர் காவிரி ஆற்றில் கலக்காதவாறு தடுக்க இரண்டு இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.10.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி துவக்கப்பட இருந்த நிலையில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடங்கள் நீர் வழித்தடமாக இருப்பதால் இடத்தினை மாற்றுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார். இந்நிலையில் பள்ளிபாளையம் நகரத்தினை சுற்றிலும் இடம் தேர்வு செய்ய வருவாய் துறையினர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஏதுவான இடம் எதுவும் கண்டறியப்படவில்லை. எனவே நகராட்சியில் இருந்து 6 கி.மீ தொலைவில், எலந்தக்குட்டை பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான 20.36 ஏக்கர் நிலத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ள நிலையில், ஆற்றங்கரையில் இருந்து எலந்தக்குட்டை பஞ்சாயத்தில் அமைந்துள்ள நிலம் வரையிலும், கழிவு நீரினை கொண்டு செல்ல குழாய்கள் அமைக்கவும், நான்கு இடங்களில் சேமிப்பு கிணறுகள் (Collection well) அமைக்கவும், புதியதாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.10.75 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1443/2023/இ1

**தீர்மான எண்.287 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.12</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் TN-34 D 4081 என்ற ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஈப்பு வாகனம் பயன்பாட்டில் இருந்த பொழுதே வழியிலேயே நின்றுவிட்டபடியால் உடனடியாக மற்றொரு வாகனம் மூலம் கட்டி இழுத்து வரப்பட்டு, அங்கீகாரம் பெற்ற பணிமனையில் வாகனம் நிறுத்தப்பட்டது. அங்கு பரிசோதிக்கப்பட்டதில் வாகனத்தின் இன்ஜின் பழுதடைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பேரில் வாகனத்தினை ஆய்வு செய்ததில் இன்ஜின் பழுதாகி வாகனத்தினை இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள இன்ஜின் பழுதுகளை சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1660/2023/இ1

**தீர்மான எண்.288 நாள். 31.10.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.13</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் கணினி அறையில் புள்ளி விபர குறிப்பாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் பயன்படுத்தி வரும் Rico MP 2501 SP என்ற பிரிண்டர் பழுதாகி உள்ளது என தெரிவித்ததின் பேரில் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் பிரிண்டர் இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்றதில் ரூ.20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1765/2023/இ1

**தீர்மான எண்.289 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.14</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் RICOH 2501SP பிரிண்டர் பழுதினை சரிசெய்யும் பணிக்கு 20.10.2023 தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ்,<br>28/1, ராமகிருஷ்ணாபுரம் வடக்கு,<br>சிட்ரா எதிர்புறம், கரூர்–639 001. | ரூ. 19,950/– |
| 2 | சி.எஸ்.இன்போடெக்,<br>7/D/E-O, 79-N ,<br>ராமகிருஷ்ணாபுரம் மேற்கு,<br>கரூர்–639001 | ரூ.20,550/– |
| 3 | இன்–சைனிக்,<br>172/3, ராமலிங்கம் ரோடு மேற்கு.<br>ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்–641 002. | ரூ.21,250/– |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1). மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ், அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2). மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1765/2023/இ1

**தீர்மான எண்.290 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.15</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆவாரங்காடு சனிசந்தை வளாகத்தில் உள்ள நகராட்சி சமுதாயக் கூடத்தின் பின்புறம் 9500 சதுர அடி நிலம் காலியாக ள்ளது. இந்நிலத்தில், ஒரு பகுதியான 1500 சதுர அடியில் தியான மண்டப கூடாரம் அமைக்க வார்டு எண் 18 மற்றும் 19வது வார்டு பொதுமக்கள் விருப்பம் தெரிவித்துள்ளதால், அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களது

கோரிக்கையாக நகர்மன்ற தலைவருக்கு கடிதம் வழங்கியுள்ளார்கள். எனவே, மேற்சொன்ன இரண்டு வார்டுகளின் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கையினை ஏற்று நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூடம் பின்புறம் 1500 சதுர அடியில் தியான மண்டபத்தினை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அமைத்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1664/2023/இ1

**தீர்மான எண்.291 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.16</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண்.TN-34AC-6035, TN-77 R-6798 மற்றும் TN-37 D-4081 ஆகிய வாகனங்களை வாட்டர் சர்வீஸ் செய்வதற்கு தனியார் நிறுவனத்தின் மூலம் செலவினம் செய்யப்படுகிறது. எனவே மேற்கண்ட வாகனங்களை நகராட்சியின் மூலமாகவே வாட்டர் வாஷ் இயந்திரம் மற்றும் சர்வீஸ் சுத்தம் செய்யும் இயந்திரம் ஆகியவற்றை கொள்முதல் செய்ய தனியார் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி ரூ.22,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1811/2023/இ1

**தீர்மான எண்.292 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.17</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களை பராமரிப்பு செய்ய வாட்டர் வாஷ் இயந்திரம் மற்றும் சர்வீஸ் சுத்தம் செய்யும் இயந்திரம் கொள்முதல் செய்ய பணிக்கான 20.10.2023ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சுவார்ட் என்டர்பிரைசஸ்,<br>3/5, இந்திரா காந்தி தெரு,<br>பழையபாளையம்,<br>ஈரோடு – 638 011. | ரூ. 21,850/– |
| 2 | ஸ்ரீ நித்தி ஆட்டோ,<br>இந்து நகர்,பழையபாளையம்,<br>பெருந்துறை ரோடு,<br>ஈரோடு – 638 009. | ரூ.22,550/– |
| 3 | டாடா போர்ஸ் ஆட்டோ கேர்,<br>38/3, பெருமாள் கவுண்டர் தோட்டம்,<br>உழவன் தெரு, சூரம்பட்டி,<br>ஈரோடு –9. | ரூ.23,250/– |

அலுவலக குறிப்பு

1). மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய எ சுவார்ட் என்டர்பிரைசஸ், அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2). மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1811/2023/இ1

**தீர்மான எண்.293 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான 5 கடைகள் 15 கட்டண கழிப்பிடங்கள் ஆண்டு குத்தகை உரிமம் 31.03.2024 உடன் முடிவடைவதால் 01.04.2024 முதல் 31.03.2027 வரை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் நகராட்சி அலுவலத்தில் பகிரங்கமான ஏலம் விடவும், ஏல அறிவிக்கைகள் 300 பிரதிகள் ஒப்பந்தப்புள்ளி கோரி அச்சிடவும் ஏல அறிவிப்பை மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் அவர்கள் மூலமாக தினசரி நாளிதழில் ஒருமுறை விளம்பரத்தவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகை விபரம் – கடைகள் | வ.எண் | குத்தகை விபரம் – கழிப்பிடம் |
|---|---|---|---|
| 1 | தினசரி மார்க்கெட் | 1 | பெரியார் நகர் பெண்கள் கழிப்பிடம் |
| 2 | பாரவண்டி சுங்க வசூல் | 2 | பெரியார் நகர் ஆண்கள் கழிப்பிடம் |
| 3 | கண்டிப்புதூர் பெட்டிக்கடை | 3 | பெரியகாடு காமராஜ் நகர் பெண்கள் கழிப்பிடம் |
| 4 | ஆவாரங்காடு பெட்டிக்கடை | 4 | பெரும்பாறைக்காடு பெண்கள் கழிப்பிடம் |
| 5 | ஆடு அடிக்கும் தொட்டி | 5 | ஆவாரங்காடு கழிப்பிடம் |
| | | 6 | மீனவர் தெரு பெண்கள் கழிப்பிடம் |
| | | 7 | சனிசந்தை தெற்கு பெண்கள் கழிப்பிடம் |
| | | 8 | சனிசந்தை வடக்கு பெண்கள் கழிப்பிடம் |
| | | 9 | சனிசந்தை அரசு மருத்துவமனை அருகில் ஆண்கள் கழிப்பிடம் |
| | | 10 | மாதாபுரம் பெண்கள் கழிப்பிடம் |
| | | 11 | மாதாபுரம் ஆண்கள் கழிப்பிடம் |
| | | 12 | உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி அருகில் பெண்கள் கழிப்பிடம் |
| | | 13 | முஸ்லீம் தெரு பெண்கள் கழிப்பிடம் |
| | | 14 | ஆர்.எஸ்.ரோடு கோவில் அருகில் பெண்கள் கழிப்பிடம் |
| | | 15 | சத்தியா நகர் அருகில் பெண்கள் கழிப்பிடம் |

**அலுவலக குறிப்பு**

1) ஆண்டு குத்தகை இனங்களை (5 கடைகள் 15 கட்டண கழிப்பிடங்கள்) 01.04.2024 முதல் 31.03.2027 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலமிட அனுமதிக்கலாம்.
2) ஏல அறிவிக்கைகள் அச்சிடவும் அதற்காகும் உத்தேச செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) ஏல அறிவிப்பை தினசரி நாளிதழில் ஒரு முறை விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தை வழங்கவும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1268/2023/அ1

**தீர்மான எண்.294 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.19</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி குமாரபாளையம் வட்டம்,நாமக்கல் மாவட்ட உரிமையியல் நீணிமன்றம் IA NO.2/OS NO.90 நாள்.18.10.2023 அன்று பள்ளிபாளையம் நகராட்சி மீது தனி நபர்கள் பொது சாலையை உரிமை கொண்டாடி வழக்கு தொடரப்பட்டுள்ளார்.மேற்கண்டுள்ள வழக்கின் மீது நகராட்சியின் சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.எம்.ரங்கசாமி,பி.ஏ.பி.எல் வழக்கறிஞர் மற்றும் சட்ட ஆலோசகர்,பள்ளிபாளையம் அவர்களை ஆஜராகவும்,வழக்கினை இந்நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பினை பெற்று வழங்கவும் அதற்கு ஆகும் செலவினம் தொகை ரூ.10,000/–(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1787/2023/எப்1

**தீர்மான எண்.295 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.20</u>**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை இரண்டாண்டு சாதனைகளை விளம்பரம் செய்ய (மாலை மலர்) மலர் பப்ளிகேஷன் லிமிடேட் நாளிதழில் 13.09.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, விளம்பர செய்ததற்காக (மாலை மலர்) மலர் பப்ளிகேஷன் லிமிடேட் நாளிதழிக்கு ரூ.15000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.825/2023/இ1

**தீர்மான எண்.296 நாள். 31.10.2023**

அங்கீகரிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.21</u>**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளை மேம்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.6003/2023/SS2 நாள்.**25.10.2023**ல் மதிப்பீடு ரூ.**74.00** லட்சம் மற்றும் புதிய கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளுக்கு ந.க.எண்.6003/2023/SS2 நாள்.**26.10.2023** ல் மதிப்பீடு ரூ.**174.00** இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**பள்ளிகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்**

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் தற்போது உள்ள கட்டிடங்களை மேம்பாட்டுப்பணிகள் செய்தல் | 30.00 |
| 2 | நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செய்தல் | 38.00 |
| 3 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் மோட்டார் அறையுடன் கூடிய ஆழ்துளைக் கிணறு அமைத்து பள்ளி மாணவர்களுக்கு தண்ணீர் வசதி செய்தல் | 6.00 |
| | **மொத்தம்** | **74.00** |

**புதிதாக கூடுதல் பள்ளி கட்டிடங்கள் கட்டும் பணி**

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணி | 32.00 |
| 2 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் 3+3 வகுப்பறைகள் கட்டும் பணி | 100.00 |
| 3 | நாட்டாகவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக இரண்டு வகுப்பறைகள் கட்டும் பணி | 32.00 |
| 4 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் கழிப்பிடம் கட்டும் பணி செய்தல் | 10.00 |
| | **மொத்தம்** | **174.00** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிடலாம்.

கோப்பு எண்.**1541/2023/இ1**

**தீர்மான எண்.297 நாள். 31.10.2023**

பார்வையிடப்பட்டது.